தினமணி

**புதுவை முன்னாள் முதல்வர் ரங்கசாமி பெயரில் புதிய சவுக்கை ரகம் உருவாக்கம்**

First Published : 17 Jan 2011 04:12:34 AM IST



ரங்கசாமி பெயரில் உருவாக்கப்பட்டுள்ள புதிய சவுக்கை ரகம். (உள்படம்) வேங்கடபதி ரெட்டியார்.

புதுச்சேரி, ஜன.16: புதுச்சேரி முன்னாள் முதல்வர் என். ரங்கசாமி பெயரில் புதிய சவுக்கை ரகத்தை கூடப்பாக்கத்தைச் சேர்ந்த விவசாயி வெங்கடபதி ரெட்டியார் உருவாக்கி வெளியிட்டுள்ளார்.

÷கனகாம்பரம், சவுக்கை உள்ளிட்ட தாவரங்களில் புதிய ரகங்களை உருவாக்கி வருகிறார் இந்த விவசாய விஞ்ஞானி. பல்வேறு விருதுகளைப் பெற்றவர்.

÷இந்நிலையில் பொங்கல் பண்டிகையில் ரங்கசாமி பெயரில் புதிய ரகத்தை இவர் வெளியிட்டார்.

÷இந்தப் புதிய ரகம் குறித்தும், அதை ரங்கசாமி பெயரில் வெளியிட்டது குறித்தும் வெங்கடபதி ரெட்டியார் கூறியது:

÷இப் புதிய ரகம் நல்ல பராமரிப்பில் ஓர் ஏக்கரில் 5 ஆண்டுகளில் 160 டன் மகசூல் கிடைக்கும். 2011-ம் ஆண்டு உழவர் திருநாளன்று இதை வெளியிடுகிறேன். இந்த இனத்தில் ஆராய்ச்சி செய்யும்போது நிற மாற்றத்துக்கு கடுமையான முயற்சியை மேற்கொண்டேன்.

முயற்சிக்கு பலன் கிட்டியது. சில சவுக்கை கன்றுகள் சிகப்பு நிறமாக தோற்றம் அளித்தன. பொதுவாக சவுக்கை மரங்கள் பச்சை நிறமாக வளரும். கன்றுகளில் குரோமோசோம்களின் மாற்றத்தால் இலைமாற்றம், நிற மாற்றம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

÷ரங்கசாமி முதல்வராக இருந்தபோது விஞ்ஞானிகளை மதித்தவர். புதுச்சேரி அரசுக்கு நிதிநிலை குறைவாக இருந்துபோதும் உலகப் புகழ்பெற்ற ஆர்கிட் மலர் சாகுபடிக்கு வழிவகுத்தவர். அந்தச்

சாகுபடிக்கு வங்கிகள் கடன் வழங்க வழி வகுத்தவர். விவசாயிகளின் கடன் சுமையை அறிந்து மானியம் கொடுத்து கடனை அரசே திருப்பிச் செலுத்த ஏற்பாடு செய்தவர்.

÷நிலத்தடி நீர் சட்டத்தின்படி ஓர் ஆழ்குழாய் கிணறு இருக்கும் இடத்தில் இருந்து 300 மீட்டர் தள்ளிதான் ஆழ்குழாய் கிணறு அமைக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் மின் இணைப்புக் கொடுக்கப்படும்.

இந்தச் சட்டச்சிக்கல் என் ஆராய்ச்சிக்குத் தடையாக இருந்தது. இதைக் கடிதம் மூலம் ரங்கசாமியின் கவனத்துக்கு முதல்வராக இருந்தபோது கொண்டு சென்றேன். என்னுடைய ஆராய்ச்சி மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தில் துணைநிலை ஆளுநரிடம் இருந்து எனக்காக விதிவிலக்குப் பெற்றுக் கொடுத்தவர் ரங்கசாமி.

÷இதையடுத்து மின் இணைப்பு கிடைத்தது. அதனால் ரங்கசாமி பெயரிலும் அடிப்படையில் நான் ஒரு விவசாயி என்பதாலும் இந்தப் புதிய ரகத்தை உழவர் திருநாளில் வெளியிட்டுள்ளேன் என்றார் வெங்கடபதி ரெட்டியார்.

**வெற்றிலை விவசாயிகளுக்கு இடுபொருள் விநியோகம்**

First Published : 17 Jan 2011 11:07:21 AM IST

தருமபுரி, ஜன.16: பென்னாகரம் வட்டாரத்தில் வெற்றிலை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை மூலம் மானிய விலையில் இடுபொருள்கள் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் வெற்றிலை உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வகையில் இவை வழங்கப்பட்டன. வட்டவழஹள்ளி ஊராட்சித் தலைவர் முருகன் இடுபொருள்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பவளத்தூர் பகுதி விவசாயிகள் ராமன், பெருமாள், ராமலிங்கம் உள்ளிட்ட விவசாயிகளுக்கு 15 ஏக்கர் பரப்புக்கான இடுபொருள்கள் வழங்கப்பட்டன. தோட்டக்கலை உதவி இயக்குநர் எஸ்.முகுந்தன், வேளாண் அலுவலர்கள் முனுசாமி, முனியப்பன், பழனி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**முட்டை விலை**

First Published : 17 Jan 2011 11:12:57 AM IST

நாமக்கல், ஜன.16: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.3.02, சென்னையில் ரூ.3.05.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.47, முட்டைக் கோழி கிலோ ரூ. 32.

**மழையால் சாகுபடி பாதிக்கப்பட்டாலும் நெல் உற்பத்தி இலக்கை எட்ட முடியும்**

First Published : 17 Jan 2011 11:10:53 AM IST

சேலம், ஜன. 16: நடப்பாண்டில் தமிழகத்தில் மழையால் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டாலும், நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 1.12 கோடி டன்னை எட்ட வாய்ப்பு உள்ளதாக வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தெரிவித்தார்.

சேலம் மாவட்டத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பல்வேறு இடங்களில் நடைபெற்ற விழாக்களில் கலந்து கொண்டு அவர் பேசியது:

தமிழகத்தில் உள்ள 1.95 கோடி குடும்பங்களுக்கு ரூ.97 கோடி செலவில் பொங்கல் பொருள்களை இலவசமாக வழங்கியுள்ளார் முதல்வர் கருணாநிதி. தமிழகத்தில் அண்மையில் பெய்த தொடர் மழையால் சுமார் 5 லட்சம் ஏக்கர் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டது.

எனினும், ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறையால் கூடுதல் மகசூல் கிடைக்கும் என்பதால் இழப்பீடை ஈடுகட்டி குறியீடான 1.12 கோடி டன் உற்பத்தி இலக்கை அடைய முடியும். கடந்த ஆண்டு 84 லட்சம் டன் குறியீடு முழுமையாக அடையப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளாக நெல் சாகுபடி பரப்பும், உணவு உற்பத்தியும் அதிகரித்து வருகிறது என்றார் அவர்.

முன்னதாக சேலம் புதிய பஸ் நிலையத்தில் இருந்து மேச்சேரிக்கு புதிய வழித்தடத்தில் டவுன் பஸ்பஸ (13 ஏ) அமைச்சர் இயக்கி வைத்தார். இதில் மேயர் ரேகா பிரியதர்ஷிணி, ஆணையர் கே.எஸ்.பழனிச்சாமி, எம்எல்ஏ வீரபாண்டி ராஜா, முன்னாள் எம்எல்ஏ கோபால், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் ஞானசேகரன், பொது மேலாளர் ஆல்பர்ட் தினகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சிறப்பாகச் செயல்படும் பால் பெருக்குத் திட்டம்**

First Published : 17 Jan 2011 10:09:00 AM IST

உதகை, ஜன. 16: நீலகிரி மாவட்டத்தில் பால் பெருக்குத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படுவதாக மாவட்ட ஆட்சியரும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத் தலைவருமான அர்ச்சனா பட்நாயக் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்ட ஆவின் சார்பில் உதகையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் ஆட்சியர் பேசியது:

கடந்த 1946-ல் 355 உறுப்பினர்களைக் கொண்டு, ரூ.10,000 முதலீட்டில் உதகையில் கூட்டுறவு பால் விநியோக சங்கம் துவக்கப்பட்டது.

பின்னர், கடந்த 1960-ல் மேலும் 20 கிராமங்களில் இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. பால் பதப்படுத்தும் இயந்திரங்களும் அமைக்கப்பட்டன.

தற்போது இந்த ஒன்றியம் 98 கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுடனும், சுமார் 36,000 உறுப்பினர்களுடனும் இயங்கி வருகிறது. இதில் 8,000 பேர் மகளிர்.

ஆவின் பால் பண்ணையில் நெய், வெண்ணெய், பால்பேடா, பாலாடைக் கட்டி உள்ளிட்ட பொருள்களும் தயாரிக்கப்படுகின்றன.

மாவட்டத்தில் தற்போது 36 வழித் தடங்களில் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. 49 செயற்கை முறை கருவூட்டல் சங்கங்களும் செயல்படுகின்றன. 371 விற்பனை முகவர்களுடனும், 78 பாலகங்களுடனும் இந்த சங்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதாகவும் ஆட்சியர் தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் குப்புசாமி, ஆவின் நிர்வாக இயக்குநர் மணி, திட்ட அலுவலர் தியாகேசன், உதவி மேலாளர் குழந்தைராஜ், உதகை நகர்மன்றத் துணைத் தலைவர் ஜே.ரவிக்குமார், நகர்மன்ற உறுப்பினர்கள் ஜார்ஜ், ரமேஷ், கார்த்திக், ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விலைவாசி உயர்வால் விழி பிதுங்குகிறது**

சா. ஷேக்அப்துல்காதர்

First Published : 17 Jan 2011 05:18:40 AM IST

விலை உயர்வைக் கட்டுப்படுத்த அமைச்சர்கள், அதிகாரிகளுடன் பிரதமர், முதல்வர் ஆலோசனை என்ற செய்திகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. நேற்று வரை விலைவாசி உயர்வைக் கண்டுகொள்ளாத இந்த ஆட்சியாளர்களுக்கு விலைவாசி உயர்வு இன்றுதான் கண்ணுக்குத் தெரிகிறதா என்ற குரல்கள் டீக்கடைகளிலும், பெட்டிக் கடைகளிலும் ஒலிப்பதைக் காண முடிகிறது.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசு சார்ந்த நிறுவனங்களில் பணி செய்து வருபவர்களும் தங்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என வலியுறுத்தி ஆர்ப்பாட்டம், மறியல் போராட்டங்கள் நடத்தி கைது செய்யப்பட்டனர் என்று செய்திகளையும் ஊடகங்களில் காண்கிறோம். அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பொங்கல் போனஸ், போக்குவரத்து ஊழியர்களுக்கு 40 சதவிகிதம் ஊதிய உயர்வு என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களுக்கு ஆண்டுக்கு இருமுறை ஊதிய உயர்வு, சிறப்பு ஊதிய உயர்வு, பொங்கல் போனஸ் என பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கு ரூ. 1008 ஊதியம் உயர்வு என திடீர் அறிவிப்பும் வெளியாகிறது. இருந்தபோதிலும், இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய விகிதம் இன்னமும் குறைவாகவே உள்ளது என்ற புகாரும் ஓயவில்லை. ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் அரசு ஊதிய விகிதத்தை உயர்த்திக் கொண்டே போகிறது. அடித்தட்டு

மக்களின் பொருளாதார நிலை குறித்து ஆட்சியாளர்கள் எண்ணுகிறார்களா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

கிலோ அரிசி ரூ. 1-க்கு வழங்குகிறோம். இலவச வீடு வழங்கும் திட்டம், நகர்ப்புற மக்களுக்கு வட்டி மானியத்துடன் வீடு கட்டுவதற்கு கடனுதவி, இலவச கலர் டிவி, காஸ் அடுப்பு, படித்த பெண்களுக்குத் திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, மாணவர்களுக்கு இலவச சைக்கிள் என மக்களுக்கு ஏராளமான சலுகைகளை வழங்கி வருகிறோம் என்றும், ஏழை, எளிய மக்கள் இருக்கும்வரை இலவசத் திட்டங்கள் தொடரும் என்றும் ஆட்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

அதிகாலை பால் கடைக்குச் சென்றால் இன்றுமுதல் லிட்டருக்கு பால் விலை ரூ. 2 உயர்ந்திருக்கிறது என்ற முதல் தகவல் கிடைக்கிறது. அடுத்த சில மணி நேரத்தில் காய்கறிகள் வாங்கக் கடைக்குச் சென்று ரூ. 100-ஐ செலவிட்டால், கை கூட நிறைவதில்லை. அடித்துப் பிடித்து டிபன் பாக்ஸில் சாப்பாட்டை எடுத்துக்கொண்டு வேலைக்குச் செல்ல பேருந்தில் ஏறினால் தாழ்தள சொகுசு பேருந்தில் வழக்கத்தைவிட ரூ. 2, ரூ. 3 கூடுதலான பேருந்துக் கட்டணம்.

இப்படி அன்றாட வாழ்வில் ஏழை, எளிய நடுத்தர மக்கள் சந்திக்கும் பிரச்னைகள்தான் ஏராளம். குறைந்தது மாதம் ரூ. 10,000 ஆயிரம்கூட வருமானம் இல்லாமல் குடும்பத்தை நடத்துவது பெரும் கஷ்டமாக உள்ளது என்பதுதான் உண்மை.

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும். வர்த்தக பேரத்தால் எழும் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஆன்லைன் வர்த்தகத்தைத் தடை செய்ய வேண்டும் என்ற கட்சிகளின் போராட்டக் குரல்களும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

ஆட்சியாளர்கள் என்னதான் நடவடிக்கை எடுத்தார்கள் அல்லது அரசு மேற்கொண்ட நடவடிக்கையால் என்ன பலன்தான் கிடைத்து. அண்மையில் வெங்காயம் விலை கடுமையாக உயர்ந்தது. பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் என அரசு அறிவித்த சில மணி நேரங்களில் விலை குறைப்பு என்ற தகவலும் வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் ஊதியம் 30 முதல் 40 சதவிகிதம் வரை உயர்ந்திருக்க வாய்ப்புள்ளது. ஆனால், தனியார் நிறுவனங்களில் பணி செய்வோரின் ஊதிய உயர்வில் மாற்றம் இல்லை.

பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ. 35 ஆக இருக்கும்போது நிர்ணயம் செய்த ஊதியம். இன்று பெட்ரோல் விலை ரூ. 61 ஆக உயர்ந்துள்ளது. இன்றும் அதே ஊதியத்தில் எத்தனை ஆயிரம் பேர் காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்.

தங்கம் விலை தினமும் உயர்ந்து வருகிறது. ஆனால், நகைக்கடைகளில் கூட்டம் குறைந்தபாடில்லை. கட்டுமானப் பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கட்டடத் தொழிலாளர்களின் ஊதியமும் பல மடங்கு உயர்ந்துள்ளது. ஆனால், கட்டுமானப் பணிகளில் தேக்கம் இல்லை. எங்கு திரும்பினாலும் புதிய கட்டடங்கள் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

கிலோ அரிசி ரூ. 1-க்கு வழங்குவதாலும், வேலை உறுதி அளிப்புத் திட்டத்தில் கிராமப்புற மக்களுக்கு 100 நாள்கள் வேலை அளிப்பதாலும் விவசாய வேலை, கூலி வேலை செய்வதற்கு தொழிலாளர்கள் கிடைப்பதில்லை என்ற நிலை. போதிய மழை இல்லாத காரணத்தாலும், பருவம் தவறி பெய்யும் மழையாலும் உணவு உற்பத்தியில் தேக்கம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இன்னொருபுறம், விளை நிலங்கள் அழிக்கப்பட்டு, புதிது புதிதாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பத்து பதினைந்து ஆண்டுகளில் பல்வேறு மாற்றங்கள்.

வாகனங்களின் பயன்பாடு அதிகரித்த காரணத்தால் சாலைகளில் போக்குவரத்து நெருக்கடி. மோட்டார் சைக்கிள் பயன்படுத்தாதவர் இல்லை என்ற நிலை காணப்படுகிறது. நாம் வளர்ச்சியை நோக்கிச் செல்கிறோமா அல்லது பகட்டான வாழ்க்கை வாழ்கிறோமா?

விலைவாசி உயர்வால் சாமான்ய மக்கள் சந்திக்கும் பிரச்னைகளுக்குத் தீர்வுதான் என்ன? ஆட்சியாளர்கள் மாறினால் இந்த நிலை மாறுமா என்பதே இப்போதைய கேள்வி.

தினமலர்

**அரசு நெல் கொள்முதல் நிலையம் இல்லாததால் நெல் "அடிமாட்டு' விலைக்கு விற்கப்படும் அவலம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,03:13 IST

காஞ்சிபுரம் : தாமல் கிராமத்தில் அரசு நெல் கொள்முதல் நிலையம் இல்லாததால், விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளையும் நெல்லை தனியார் நெல் மண்டிகளில் "அடிமாட்டு' விலைக்கு விற்க வேண்டிய அவல நிலை தொடர்கிறது.காஞ்சிபுரத்தில் இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது தாமல் ஊராட்சி. இங்கு 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் விவசாயிகள். கிராமத்திற்கு கிழக்குப் பகுதியில் 800 ஏக்கர் பரப்பளவு கொண்ட பெரிய ஏரி உள்ளது. பதினொன்று மதகுகள் கொண்ட இந்த ஏரி பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் இருந்து வருகிறது.இது 3 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்களுக்கு பாசன வசதி கொடுக்கிறது. இது தவிர இந்த ஊராட்சியில் 200 விவசாய பம்பு செட்டுகளும் உள்ளன. பருவ மழை பெய்து தாமல் ஏரி நிரம்பினால் மூன்று போகம் நெல் விளையும். பம்புசெட்டுகள் வைத்திருக்கும் விவசாயிகள் தொடர்ந்து நெற்பயிரை சாகுபடி செய்கின்றனர்.

இங்கு விளையும் நெல்லை விவசாயிகள், 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காஞ்சிபுரம் தனியார் நெல் மண்டிகளுக்கு எடுத்து சென்று விற்பனை செய்கின்றனர். 800 ரூபாய் முதல் 900

ரூபாய் வரை விற்க வேண்டிய ஒரு மூட்டை நெல், ஏற்றிச்செல்லும் கூலி, எடைபோடும் கூலி, இடைத்தரகர்கள், வேறு மண்டிகளுக்கு பரிந்துரை என பல வழிகளில் கமிஷன் போக விவசாயிகளுக்கு கையில் கிடைப்பது 600 ரூபாய் தான்.தாமல் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி குமரன் கூறும்போது, கடன் வாங்கி விவசாயம் செய்கிறோம். விளையும் நெல்மணிகளை நியாயமான விலைக்கு விற்க முடியாமல், மிக குறைந்த விலைக்கு விற்க வேண்டியுள்ளது. எங்கள் உழைப்பை இடைத்தரகர்கள் "சாப்பிடு'கின்றனர். இதனால் ஒவ்வொரு போகத்திற்கும் நாங்கள் வாங்கும் கடனை திருப்பி செலுத்த முடியாத நிலை தொடர்கிறது.எங்கள் கிராமத்தில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைத்தால், விவசாயத்தில் நாங்கள் முழு லாபத்தை பெற முடியும். தாமல் கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க ஊராட்சிக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் நிலம் அரசு மேல்நிலைப் பள்ளி எதிரே உள்ளது.அங்கு நெல் கொள்முதல் நிலையம் ஏற்படுத்தினால் தாமல் கிராமம், இதை சுற்றியுள்ள ஓச்சேரி, அவளூர், பெரும்புலிபாக்கம், சித்திஞ்ஜி, கிளார், பெரும்பாக்கம், களத்தூர் உட்பட 10 கிராம மக்கள் பயனடைவர். எனவே தாமல் ஊராட்சியில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேளாண்மைத் துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு குமரன் தெரிவித்தார்.

**நவீன தொழில்நுட்ப வளர்ச்சி இருந்தும்விவசாயம் செய்வதில் ஆர்வம் குறைவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,03:14 IST

ஆர்.கோபால கிருஷ்ணன் -நவீன தொழிநுட்பங்கள் வளர்ந்து வந்தாலும், விவசாயம் செய்வதில் விவசாயிகளிடையேஆர்வம் குறைந்து வருகிறது. : பொன்னேரி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயம் பிரதான தொழிலாக இருந்து வந்தது. முன் காலங்களில் காளை மாடுகளை பூட்டி ஏர் உழுது, பெண்கள் நடவு பணிகளை மேற்கொண்டனர். கையால் அறுவடை செய்து, களத்துமேட்டில் அடித்து நெல்லை பிரித்தெடுத்தனர்.இதற்கு ஏராளமான வேலையாட்கள் தேவைப்பட்டனர். அதிக கால அவகாசமும் செலவிடப்பட்டது. இயற்கை உரங்களே அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது. அத்தகைய சிரமமான சூழ்நிலையிலும் விவசாயிகள் தொடர்ந்து விவசாயம் செய்து வந்தனர். தற்போது நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் டிராக்டரை கொண்டு உழவுப்பணிகளையும், நடவுப்பணிகளுக்கென தனி இயந்திரத்தை பயன்படுத்துவதும் அதிகரித்துள்ளது.வளர்ந்த நெற்கதிர்கள் உள்ள நிலத்தில், ஒரு மணிநேரத்தில் ஒரு ஏக்கர் பரப்பை அறுவடை செய்து, நெல்மணிகளை பிரித்தெடுக்கும் இயந்திரங்களும் வந்துவிட்டது. இத்தனை நவீன வசதிகள் இருந்தும் தற்போது விவசாயம் செய்வோரின் எண்ணிக்கை நாளுக்குள் நாள் குறைந்து வருகிறது.

மின் தட்டுப்பாடு, உரத் தட்டுபாடு, மழையின்மை அல்லது அதிகப்படியான மழை போன்ற

சூழல்களால் விவசாயிகள் பெரும் இன்னல்களுக்கிடையே விவசாயம் செய்து வருகின்றனர். பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில், நிவாரணமும் கிடைப்பதில்லை.இதனால் விளை நிலங்கள் வீட்டு மனைகளாகவும், காங்கிரீட் மனைகளாகவும் மாறி வருகிறது. கிராமப்புற மக்கள் விவசாயத்தை மறந்து, நகர் புறங்களை நாடி செல்லும் நிலைக்கு வந்து விட்டனர். பாரம்பரியத் தொழிலான விவசாயத்தை மறக்காமல், ஒரு சிலர் மட்டும் தொடர்ந்து விவசாய பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.இந்த நிலை தொடர்ந்தால் பொன்னேரி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் அடுத்த சில ஆண்டுகளில் விவசாயம் முற்றிலும் மறைந்துவிடும். பாதிப்புக்குள்ளாகும் விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் உரிய நிவாரணமும், தேவையான விவசாய ஆலோசனைகளையும் வழங்கினால் மட்டுமே இப்பகுதியில் விவசாயம் தழைத்தோங்கும்.

**ஏரியில் மீன் வளர்க்க எதிர்ப்புவரும் 22ல் பேச்சுவார்த்தை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,02:21 IST

கெங்கவல்லி: கெங்கவல்லி அருகே, ஏரியில் மீன் குஞ்சுகள் விட எதிர்ப்பு தெரிவித்தது குறித்து, இருதரப்பினரை அழைத்து போலீஸார் விசாரணை நடத்தினர்.கெங்கவல்லி தெடாவூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான 250 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரி உள்ளது. இந்தாண்டு பெய்த கன மழைக்கு ஏரி முழுவதும் நீர் நிறைந்து தண்ணீர் வெளியேறி வருகிறது.தம்மம்பட்டி நீர்பாசன பிரிவு அலுவலர்கள், ஏரியில் மீன் குஞ்சு விட்டு வளர்க்க ஏலம் விடுவதாக அறிவித்தனர். அதையடுத்து தெடாவூர் ஆயக்காட்டு பாசன விவசாயிகள் சங்கத்தலைவர் கோவிந்தராஜ் 38,500 ரூபாய்க்கு ஏரியில் மீன் குஞ்சு வளர்க்க குத்தகைக்கு எடுத்துள்ளார். வரும் 17ம் தேதி காணும் பொங்கல் நாளில் ஏரியில் மீன்குஞ்சுகள் விடுவதாக தெரிவித்தார்.

அதற்கு கிராமமக்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்து, கிராமத்தின் சார்பில் மீன் குஞ்சுகள் ஏரியில் விட்டு வளர்க்க வேண்டும் என தெரிவித்தனர்.அதன்பின் எதிர்ப்பு தெரிவித்தவர்கள் கெங்கவல்லி போலீஸ், தாசில்தார் ஆகியோரிடம் புகார் செய்தனர். அதன்பேரில் நேற்று கெங்கவல்லி போலீஸ் எஸ்.ஐ., அன்பரசன் தலைமையில் இருதரப்பிடையே பேச்சுவார்த்தை நடத்தினார்.அப்போது, கிராம மக்கள் சிலர் எதிர்ப்பு தெரிவிப்பதால், தற்போது மீன் குஞ்சுகள் ஏரியில் விடவில்லை. வரும் 22ம் தேதி மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதாக போலீஸார் தெரிவித்தனர். அதற்கு இருதரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

**நவீன தொழில் நுட்ப வளர்ச்சி இருந்தும் விவசாயம் செய்வதில் ஆர்வம் குறைவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,03:21 IST

ஆர்.கோபால கிருஷ்ணன்/பொன்னேரி

நவீன தொழிநுட்பங்கள் வளர்ந்து வந்தாலும், விவசாயம் செய்வதில் விவசாயிகளிடையே ஆர்வம் குறைந்து வருகிறது.

பொன்னேரி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயம் பிரதான தொழிலாக இருந்து வந்தது. முன் காலங்களில் காளை மாடுகளை பூட்டி ஏர் உழுது, பெண்கள் நடவு பணிகளை மேற்கொண்டனர். கையால் அறுவடை செய்து, களத்துமேட்டில் அடித்து நெல்லை பிரித்தெடுத்தனர்.இதற்கு ஏராளமான வேலையாட்கள் தேவைப்பட்டனர். அதிக கால அவகாசமும் செலவிடப்பட்டது. இயற்கை உரங்களே அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது.அத்தகைய சிரமமான சூழ்நிலையிலும் விவசாயிகள் தொடர்ந்து விவசாயம் செய்து வந்தனர்.தற்போது நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் டிராக்டரை கொண்டு உழவுப்பணிகளையும், நடவுப்பணிகளுக்கென தனி இயந்திரத்தை பயன்படுத்துவதும் அதிகரித்துள்ளது.வளர்ந்த நெற்கதிர்கள் உள்ள நிலத்தில், ஒரு மணிநேரத்தில் ஒரு ஏக்கர் பரப்பை அறுவடை செய்து, நெல்மணிகளை பிரித்தெடுக்கும் இயந்திரங்களும் வந்துவிட்டது. இத்தனை நவீன வசதிகள் இருந்தும் தற்போது விவசாயம் செய்வோரின் எண்ணிக்கை நாளுக்குள் நாள் குறைந்து வருகிறது.மின் தட்டுப்பாடு, உரத் தட்டுபாடு, மழையின்மை அல்லது அதிகப்படியான மழை போன்ற சூழல்களால் விவசாயிகள் பெரும் இன்னல்களுக்கிடையே விவசாயம் செய்து வருகின்றனர். பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில், நிவாரணமும் கிடைப்பதில்லை.இதனால் விளை நிலங்கள் வீட்டு மனைகளாகவும், காங்கீரிட் மனைகளாகவும் மாறி வருகிறது. கிராமப்புற மக்கள் விவசாயத்தை மறந்து, நகர் புறங்களை நாடி செல்லும் நிலைக்கு வந்து விட்டனர். பாரம்பரியத் தொழிலான விவசாயத்தை மறக்காமல், ஒரு சிலர் மட்டும் தொடர்ந்து விவசாய பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.இந்த நிலை தொடர்ந்தால் பொன்னேரி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் அடுத்த சில ஆண்டுகளில் விவசாயம் முற்றிலும் மறைந்துவிடும். பாதிப்புக்குள்ளாகும் விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் உரிய நிவாரணமும், தேவையான விவசாய ஆலோசனைகளையும் வழங்கினால் மட்டுமே இப்பகுதியில் விவசாயம் தழைத்தோங்கும்.

**விவசாயிகளுக்கு வெள்ள நிவாரணம் 19ம் தேதி சாலை மறியல் செய்ய முடிவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 15,2011,23:11 IST

சேத்தியாத்தோப்பு : விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரி 19ம் தேதி சாலை மறியல் போராட்டம் நடத்த 6 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் முடிவு செய்துள்ளனர். சேத்தியாத்தோப்பை அடுத்த மஞ்சக்கொல்லையில் மிராளூர், மஞ்சக்கொல்லை, வாண்டையாங்குப்பம், வத்தராயன்தெத்து, சீயப்பாடி, கிளாவடிநத்தம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாய சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. வள்ளலார் கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர் சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். மஞ்சக்கொல்லை ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், வத்தராயன்தெத்து முன்னாள் ஊராட்சி தலைவர் முத்துகுமாரசாமி, கிளாவடிநத்தம் பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தனர். வாண்டையாங்குப்பம் மணிவண்ணன் வரவேற்றார். புலவர் அமிர்தலிங்கம், சீயப்பாடி மதிவாணன், குமார் தேசிங்கு, அருள், ராமலிங்கம் உள்ளிட்ட விவசாய சங்க நிர்வாகிகள் பேசினர். கூட்டத்தில் கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதம் பெய்த மழையின் போது சிதம்பரம் தாலுகாவில் வெள்ளாற்றின் கரையோரம் உள்ள 6 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். வெள்ள நிவாரணம் குறித்து இதுவரை கணக்கெடுப்பு நடத்தவில்லை. இதனைக் கண்டித்தும் விளை நிலங்களுக்கான நிவாரணம் உடனடியாக வழங்க கோரியும் மஞ்சக்கொல்லை வேளாண்மை கூட்டுறவு வங்கி முன் முன்னாள் ஊராட்சி தலைவர் அமிர்தலிங்கம் தலைமையில் வரும் 19ம் தேதி சாலை மறியலில் ஈடுபடுவது. மிகவும் மோசமாக வீணாகியுள்ள புவனகிரி சாலையை விரைவாக சீரமைக்க வேண்டும். மழையால் பாதிக்கப்பட்ட அனைத்து வீடுகளில் இதுவரை வெள்ள நிவாரணம் வழங்காதவர்களுக்கு உடனடியாக வெள்ள நிவாரணம் வழங்க வேண்டும் என்பவை உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஊராட்சி உறுப்பினர் பாரி நன்றி கூறினார்.

**கால்நடை முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,00:28 IST

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் செங்குடியில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடைபெற்றது. கால்நடை உதவி இயக்குனர் காவேரி செல்வன் தலைமைவகித்தார். ஊராட்சி தலைவர் சூசை முன்னிலை வகித்தார். டாக்டர் சிவரஞ்சனி கால்நடை பேசினார். கால்நடை கன்று ஊர்வலம் நடத்தப்பட்டு சிறந்த கலப்பின கிடேரி கன்றுகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.

**10 நாளில் அறுவடை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,00:30 IST

கீழக்கரை: திருப்புல்லாணி யூனியனில் ஐந்து ஆயிரத்திற்கும் அதிகமான எக்டேரில் விவசாயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெருமழையால் தப்பித்த பயிர்கள் தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது,இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் உள்ளார்.நெல் அறுவடை இயந்திர உரிமையாளர்கள் முகாமிட்டு அறுவடை பதிவுகளை செய்கின்றனர். வேளாண்மை உதவி இயக்குனர் கமாலுதீன் கூறியதாவது: நடப்பாண்டில் முதற்கட்டமாக 35 சதவீத அறுவடைப் பணிகள் 10 நாளில் துவங்கிவிடும் என எதிர்பார்க்கிறோம் ,என்றார்.

**பயிர் இழப்பீட்டு தொகையாக ரூ.21.5 கோடி அரசு ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,02:28 IST

தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக இரண்டாம் தவணையாக 21.5 கோடி ரூபாயினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இது குறித்து கலெக்டர் மகேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது; தூத்துக்குடி மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழையினால் 83 ஆயிரம் ஏக்டர் பரப்பளவில் பயறு வகை, மிளகாய், கொத்தமல்லி, நெல், கம்பு, எள் போன்ற பயிர்கள் சேதமடைந்தது. எனவே அரசுக்கு இழப்பீட்டு தொகையாக 33.5 கோடி ரூபாய் கேட்டு கருத்துரு அனுப்பப்பட்டது. அரசு வழங்கிய முதல் தவணையான 12 கோடி ரூபாய் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மீதி 21.5 கோடி ரூபாயினை அரசு அளித்துள்ளது. அதனை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவரும் தொடர்புடைய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை அணுகி இழப்பீட்டு தொகையினை பெற்றுக் கொள்ளலாம் என்று அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 15,2011,22:57 IST

திருக்கோவிலூர் : வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் முகையூர் ஒன்றியத்தில் உள்ள விவசாயிகளுக்கு மணம்பூண்டியில் தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.

நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் தமிழக அரசு துறைகள் சார்பில் அளிக்கும் மானியங்கள், வேளாண் விளை பொருட்களை விற்பனை சந்தையில் லாபகரமாக விற்பனை செய்யும் தொழில்நுட்ப யுத்திகள் பற்றி பல துறைகளை சேர்ந்த அறிஞர்கள் பயிற்சியளித் தனர். வேளாண் வணிகத்துறை இயக்குனர் தனவேல் தலைமை தாங்கினார். வேளாண்மை அலுவலர் செந்தில் வரவேற்றார். விருத்தாசலம் உழவியல் மண்டல ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் செல்வராஜ், வேளாண் உதவி இயக்குனர் ராஜசேகர், தோட்டக் கலை உதவி இயக்குனர் பாலகிருஷ்ணன், வேளாண்மை அலுவலர் பெரியசாமி பேசினர். நீர் பாசன சங்க தலைவர்கள், உறுப்பினர்கள், வேளாண் விற்பனைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் முத்து நன்றி கூறினார்.

**கால்நடை கிளை மருத்துவமனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 15,2011,22:57 IST

விக்கிரவாண்டி : விக்கிரவாண்டி ஒன்றியம் ஆசூர் கிராமத்தில் புதிய கால்நடை கிளை மருத்துவமனை திறப்பு விழா நடந்தது. ஒன்றிய கவுன்சிலர் இளங்கோவன் முன்னிலை வகித்தார். ஊராட்சி தலைவர் சபாபதி வரவேற்றார். மண்டல இணை இயக்குனர் டாக்டர் கல்யாணராமன் கால்நடை துறையின் பாராமரிப்பு பணிகள் குறித்து பேசினார். விழுப்புரம் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குனர் டாக்டர் மோகன், உதவி இயக்குனர் (நோய் புலனாய்வு பிரிவு) டாக்டர் மோகன் ஆகியோர் திட்ட விளக்கவுரை ஆற்றினர். ஒன்றிய சேர்மன் நாகப்பன் புதிய கிளை கால்நடை மருத்துவ மனையை திறந்து வைத்து பேசினார். விழாவில் டாக்டர்கள் இளங்கோவன், குருவையா, ராஜா சிதம்பரம், மகேந்திரன், செந்தில்குமார், தாமோதரன், அன்பழகன், நரேந்திரன், முரளிநாதன், ரகுநாத், பி.டி.ஓ.,க்கள் மனோகரன், குமாரி, ஊராட்சி துணை தலைவர் கடவுள், தி.மு.க., இளைஞரணி அமைப்பாளர் எத்திராசன் உட்பட பலர் கலந்துக் கொண்டனர். ஊராட்சி உதவியாளர் பாபு நன்றி கூறினார்.

**இயந்திரம் மூலம் நாற்று நடவு விவசாயிகளுக்கு செயல்விளக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 15,2011,22:57 IST

செஞ்சி : நங்கிலி கொண்டான் கிராமத்தில் விவசாயிகளுக்கு இயந்திரம் மூலம் நாற்று நடவு செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது. ஜப்பான் நாட்டின் யான்மார் நிறுவனத்தின் நெல் நாற்று நடவு இயந்திரத்தை பெங்களூருவை சேர்ந்த வர்ஷப்பரியா அக்ரோடெக் நிறுவனத்தினர் விற்பனை செய்து வருகின்றனர். மொத்தம் 17.50 லட்சம் மதிப்பிலான இந்த இயந்திரத்தை 4 லட்சம்

மானியத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வழங்குகின்றனர். களையூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு இந்த இயந்திரத்தின் செயல்விளக்கம் நங்கிலிகொண்டான் கிராமத்தில் செய்து காண்பிக்கப்பட்டது. விவசாயி கலைச்செல்வன் நிலத்தில் நடந்த செயல் விளக்கத்தில் கடன் சங்க செயலாளர் கிருஷ்ணசாமி, வர்ஷப்பிரியா களமேலாளர் ஆண்டனி முத்து மற்றும் கூட்டுறவு கடன் சங்க ஊழியர்கள், விவசாயிகள் கலந்துக் கொண்டனர். இந்த நடவின் மூலம் ஆள் பற்றாக்குறையை சமாளிப்பதுடன், நடவிற்கான செலவும் குறையும், அத்துடன் 25 சதவீதம் மகசூலும் அதிம் கிடைக்கும் என கூட்டுறவு வங்கி செயலாளர் கிருஷ்ணசாமி கூறினார்.

**உணவு உற்பத்தி குறியீடு 112 லட்சம் மெட்ரிக் டன் : வேளாண் அமைச்சர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,01:53 IST

சேலம்: ""நடப்பு ஆண்டு, 112 லட்சம் மெட்ரிக் டன், உணவு உற்பத்தி குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது,'' என, சேலத்தில் வேளாண் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தெரிவித்தார். சேலம் பூலாவரி கிராமத்தில் சமத்துவ பொங்கல் விழா நேற்று கொண்டாடப்பட்டது. அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தலைமை வகித்தார். தொடர்ந்து, சோனா கல்லூரி அருகில் அமைக்கப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையை அவர் திறந்து வைத்தார். சேலம் புதிய பஸ் ஸ்டாண்டில், சேலத்தில் இருந்து மேச்சேரி செல்லும் புதிய வழித்தட பஸ்சை அமைச்சர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: தை முதல் நாளை தமிழ் புத்தாண்டாக முதல்வர் அறிவித்தார். பொங்கல் விழாவுடன் சேர்த்து புத்தாண்டை கொண்டாடி வருகிறோம். விவசாயிகள் மட்டுமின்றி அனைத்து தரப்பு மக்களும் கொண்டாடும், இப்பண்டிகைக்காக, 1.95 கோடி ரேஷன் கார்டுகளுக்கு, பொங்கல் பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில், இந்த ஆண்டு, 112 லட்சம் மெட்ரிக் டன், உணவு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை அடைவதற்கான முயற்சியும் எடுக்கப்பட்டுள்ளது. சில மாதங்களுக்கு முன் பெய்த கனமழையால் ஐந்து லட்சம் ஏக்கர் பயிர் பாதிப்படைந்தன. இதை ஈடுகட்ட அதிக விளைச்சல் தரும் ராஜராஜன் 1000 சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இப்பயிர் மூலம் இழப்பை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட உணவு உற்பத்தியை நாம் அடைவோம் என நம்புகிறோம். நான்கு ஆண்டுகளில் குறிப்பிட்ட இலக்கை எட்டியுள்ளோம். இதற்காக சாகுபடி பரப்பளவை அதிகரித்து உணவு உற்பத்தியை பெருக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது, என்றார். மேயர் ரேகாபிரியதர்ஷினி, கமிஷனர் பழனிசாமி, போக்குவரத்து கழக கோட்ட மேலாளர் ஞானசேகரன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

**கரும்பு, மஞ்சள் விற்பனை அமோகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 15,2011,00:43 IST

தர்மபுரி: தர்மபுரியில் பொங்கல் பண்டிகையொட்டி கரும்பு, மஞ்சள் குலை விற்பனை அமோகமாக நடந்தது. பெங்கல் பண்டிகையொட்டி நேற்று தர்மபுரி பஜார் வீதிகளில் நடையோரங்களில் அதிக அளவில் விவசாயிகள், வியாபாரிகள் கரும்பு, மஞ்சள் குலைகள் விற்பனைக்கு குவித்திருந்தனர். கடந்தாண்டை விட விலை அதிகரித்து இருந்த போதும், பொது மக்கள் பொங்கல் விழாவுக்காக ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். ஒரு ஜோடி கரும்பு 40 ரூபாய் இருந்து 60 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டது. மஞ்சள் செடிகள் ஒரு ஜோடி 20 முதல் 50 ரூபாய் வரையில் விற்பனை ஆனாது. பூவும் வழக்கத்தை விட பல மடங்கு அதிகரித்து இருந்தது. சாமந்தி பூ முழம் 20 ரூபாய்க்கும், மல்லிகை, ஜாதி மல்லி உள்ளிட்ட பூக்கள் முழம் 50 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. காய்கறிகளும் வழக்கத்தை விட கூடுதல் விலைக்கு விற்பனையானது. வெள்ளை பூசணி கிலோ 20 ரூபாய்க்கும்,ந பச்சை பட்டாணி கிலே 80 ரூபாய்க்கும், கேரட், பீட்ரூட் உள்ளிட்டவைகள் கிலோ 40 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. விலை அதிகரித்த போதும் பொதுமக்கள் ஆர்வத்துடன் காய்கறிகள், கரும்பு, மஞ்சள் உள்ளிட்டவைகளை வாங்கி சென்றனர். * முக்கிய சாலைகளில் பாதுகாப்பு: பொங்கல் பண்டிகையொட்டி கிராம பகுதியில் இருந்து அதிக அளவில் பொதுமக்கள் தர்மபுரியில் பல்வேறு பொருட்கள் வாங்க குவிந்ததால், நகரின் முக்கிய கடை வீதிகளில் மக்கள் நெரிசல் அதிகம் இருந்தது. ஜவுளிக்கடைகள் முதல் மளிகை கடைகள் வரையில் கூட்டம் அதிகம் இருந்தது. பஸ் ஸ்டாண்ட் மற்றும் கடை வீதிகளில் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

**தோட்டக்கலை பல்கலை அமைக்க இடம் பரிந்துரை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,01:56 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை பல்கலைகழகம் அமைக்க கிருஷ்ணகிரி அடுத்த ஜுனூர் உள்ளிட்ட நான்கு இடங்களை தோட்டக்கலை துறை மாவட்ட நிர்வாகத்துக்கு பரிந்துரை செய்துள்ளது. "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு தோட்டக்கலை பல்கலை கழகம் அமைக்கப்படும்' என சட்ட சபை கூட்டத்தில் கவர்னர் உரையில் அறிவிக்கப்பட்டது. இதையடுத்து தமிழ்நாடு தோட்டக்கலை பல்கலை கழகம் அமைக்க இடம் தேர்வு செய்ய கலெக்டர் அருண்ராய் தோட்டக்கலை துறைக்கு அறிவுரை வழங்கினார்.

இதன்படி 303 ஏக்கர் பரப்பில் கிருஷ்ணகிரி அடுத்த தேசிய நெடுஞ்சாலையோரம் உள்ள ஜுனூர் அரசு தோட்டக்கலை பண்ணை, 128 ஏக்கர் பரப்புள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நாகமங்கலம் பண்ணை, 1,714 ஏக்கர் உள்ள மத்திகிரி கால்நடைப்பண்ணை, தேன்கனிக்கோட்டை அடுத்துள்ள 968 ஏக்கர் உள்ள கோலட்டி பட்டு வளர்ச்சி பண்ணை ஆகிய நான்கு இடங்களை தோட்டக்கலை துறை தேர்வு செய்து கலெக்டருக்கு அனுப்பியுள்ளனர். இந்த நான்கு இடங்களை தமிழக தோட்டக்கலை துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆய்வு செய்த பின் எந்த இடத்தில் தோட்டக்கலை பல்கலைகழகம் அமைக்கப்படும் என்பது முடிவு செய்யப்படும்.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 15,2011,01:28 IST

மதுரை : மதுரை மேற்கு வட்டாரத்தில் விவசாயிகளுக்கு அடை யாள அட்டை, இடு பொருட்கள் வழங்கப்பட்டன.தேனூர், பொதும்பில் வேளாண் இடுபொருள் வழங்கும் முகாம் இணை இயக்குனர் சங்கரலிங்கம் தலைமையில் நடந்தது. இதில், விவசாயத்திற்கு தேவையான ஜிங் சல்பேட், நுண்ணுயிர் பொட்டலம், கோனாவீடர் மற்றும் மார்க்கர் கருவிகள், நெல் நுண்ணூட்ட உரம் ஆகியவை மானிய விலையிலும், விவசாயிகளுக்கு அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டன. துணை இயக்குனர்கள் சேவுகப்பெருமாள், சம்பத்குமார் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை உதவி இயக்குனர் வடிவேல்குமார், வேளாண் அலுவலர் சரவணன், உதவி வேளாண் அலுவலர் நடராஜன் செய்திருந்தனர்.

**விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 15,2011,01:30 IST

சோழவந்தான் : சோழவந்தானில் வாடிப்பட்டி கோட்ட வேளாண்மைத்துறை சார்பில், விவசாயிகளுக்கான தொழில்நுட்ப திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. சோழவந்தான் பேரூராட்சி தலைவர் ரா.கலாவதி தலைமை வகித்தார். மதுரை நடமாடும் மண் பரிசோதனை நிலைய முதன்மை அலுவலர் சிவக்குமரன் முன்னிலை வகித்தார். துணைவேளாண் அலுவலர் அம்பிகாபதி வரவேற்றார். வேளாண் கோட்ட உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கூறுகையில், மானிய திட்டங்கள், மண் மாதிரி எடுக்கும்முறை, உர சிபாரிசு, உரமிடுமுறை, "ராஜராஜன் 1000' நெல் சாகுபடி தொழில் நுட்ப இயந்திர மூலம் நடவு முறைகள் குறித்து விரிவாக எடுத்து கூறினார். விவசாயிகளுக்கு நெல் சாகுபடி செயல்விளக்க படக்காட்சி காட்டப்பட்டது. உதவி வேளாண் அலுவலர்கள் சந்தனகருப்பு, முத்தையா, ரதிப்பிரியா ஏற்பாடு செய்திருந்தனர்.

379 நெல் கொள்முதல் நிலையம் திறப்பு

பதிவு செய்த நாள் : ஜனவரி 15,2011,01:03 IST

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில் 2011ம் ஆண்டு காரீப் பருவத்துக்காக திருவாரூர் தாலுகாவில் 29 அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம், நன்னிலத்தில் 39, குடவாசலில் 66, வலங்கைமான் 47, நீடாமங்கலம் 51, மன்னார்குடியில் 100, திருத்துறைப்பூண்டி 47 என மாவட்டம் முழுவதும் 379 நெல் கொள்முதல் நிலையங்கள் நேற்று முதல் திறந்து செயல்படுகிறது. மேலும், ஈரப்பதம் 20 சதவீதம் வரையும், நிறம் மாறிய நெல் ஐந்து சதவீதம் வரையும் கொள்முதல் செய்யப்படுகிறது. 300 மூடைக்கு மேல் விவசாயிகளிடம் நெல் இருந்தால் நேரடியாக வாகனத்துடன் சென்று கொள்முதல் செய்யப்படும். கொள்முதல் நிலையங்களில் மின்னணு தராசு, நெல் தூற்றும் இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது. நெல் தூற்றும் இயந்திரத்துக்கு ஆகும் செலவை நிர்வாகம் சார்பில் வழங்கப்படுவதால், விவசாயிகள் அதற்கான தொகை வழங்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு கட்டாயப்படுத்தி தொகை வசூலித்தால், திருவாரூர் மண்டல அலுவலகம் தொலைபேசி எண் 9442255542 மற்றும் தலைமை அலுவலகம் சென்னை எண் 94451 90661 ஆகிய தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம். இந்தாண்டு மூன்று முதல் மூன்றரை லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக ஒன்றரைக்கோடி சாக்குகள் தயார் நிலையில் உள்ளன. தினமும் ஐந்து லட்சம் ரூபாய் வரை ஒவ்வொரு நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் பணம் பட்டுவாடா செய்யப்படும். மத்திய அரசு அறிவித்துள்ள ஆதார விலையும், தமிழக அரசு அறிவித்துள்ள ஊக்கத்தொகையும் சேர்த்து "ஏ' கிரேடு ரக நெல் குவிண்டால் ஆயிரத்து 100 ரூபாயும், பொதுரக நெல் ஆயிரத்து 50 ரூபாயும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்தகவலை கலெக்டர் சந்திரசேகரன் தெரிவித்தார். முதுநிலை மண்டல மேலாளர் (பொறுப்பு) கோபாலகிருஷ்ணன், தரக்கட்டுப்பாட்டு உதவி மேலாளர் செல்லப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

திருவாரூர் தாலுகா குன்னியூர் கிராமத்தில் கொள்முதல் நிலையத்தை கலெக்டர் சந்திரசேகரன் திறந்து வைத்தார்.

**கொற்கை கால்நடை பண்ணையில் கால்நடைத்துறை கமிஷனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,02:26 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகே உள்ள கொற்கை கால்நடை பண்ணையில் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் துறை கமிஷனர் மாலிக் பெரோஸ்கான் ஆய்வு செய்தார். திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே கொற்கையில் 495.68 ஏக்கரில்

செயல்படும் கால்நடை பண்ணையை கமிஷனர் மாலிக் பெரோஸ்கான் ஆய்வு செய்தார். அங்கு வளர்க்கப்படும் உம்பளச்சேரி பசுமாடு இனத்தை பார்வையிட்டு, மாடு பராமரிப்பு, உணவு வழங்குதல், கால்நடைகள் பனி, மழைகாலங்களில் எவ்வாறு பராமரிப்பது என்பது குறித்து கேட்டறிந்தார். பண்ணையின் பரப்பளவு, தீவணப்புல் வளர்ப்பு குறித்து விளக்கப்பட்டது. பராமரிப்பு குறித்து அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

மண்டல இணை இயக்குனர் பழனியப்பன், துணை இயக்குனர் சிவானந்தன், மன்னார்குடி உதவி இயக்குனர் அழகிரிசாமி, கொற்கை கால்நடைப்பண்ணை டாக்டர் ராமலிங்கம் ஆகியோர் உடனிருந்தனர். இப்பண்ணையில் 249 கால்நடைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்குள்ள மாடுகளுக்கு 233.86 ஏக்கரில் மேய்ச்சல் நிலம் தயாரிக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. கடந்த 2009ம் ஆண்டு முதல் 125 ஏக்கரில் மகாராஷ்டிரா தீவணப்புல் 34.50 லட்சம் ரூபாய் செலவில் மத்திய அரசின் நிதியுதவியுடன் வளர்க்கும் பணி நடக்கிறது. விவசாயிகளுக்கு இதுவரை 73 ஆயிரத்து 665 கிலோ புல் விற்பனை செய்யப்பட்டு 73 ஆயிரத்து 665 ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. பண்ணையில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு ஆயிரத்து 642.87 டன் தீவணப்புல் உணவாக பயன்படுத்தப்பட்டுள்ளது. 498 விவசாயிகள் தீவணப்புல் பெற்று பயனடைந்துள்ளனர். 23 விவசாயிகளுக்கு தீவணப்புல் வளர்க்க 94 ஆயிரம் புல் கரணைகள் வழங்கப்பட்டுள்ளது. புல் கரணை மூலம் 13 ஆயிரத்து 160 ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

**கிலோ ரூ.160க்கு கோக்கோ விதை கொள்முதல்: அதிகாரி அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,02:24 IST

தஞ்சாவூர்: "தஞ்சாவூர் மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் தேசிய தோட்டக்கலை இயக்குகத்தின் கீழ் தென்னையில் ஊடுபயிராக சாகுபடி செய்ய ஏக்கருக்கு 200 கோக்கோ கன்றுகள் மற்றும் அதற்கு தேவையான உயிர் உரங்கள், இயற்கை உரங்கள், நீரில் கரையும் உரங்கள் வழங்கப்பட்டுள்ளது' என தோட்டக்கலை துணை இயக்குனர் செல்வராஜ் தெரிவித்தார்.
அவர் வெளியிட்ட அறிக்கை: கடந்த 2007-08ம் ஆண்டில் நடவு செய்யப்பட்ட கோக்கோ கன்றுகள் தற்போது மகசூல் தர துவங்கியுள்ளன. சாக்லேட் தயாரிப்பில் முன்னணி நிறுவனமாக விளங்கும் கேட்பரீஸ் இந்திய நிறுவனம் தற்போது கோக்கோ விதைகளை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய துவங்கியுள்ளது. ஒரு கிலோ கோக்கோ விதைகள் தற்போது ரூபாய் 160க்கு கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை தஞ்சை மாவட்டத்தில் 1,200 கிலோ கோக்கோ விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

தென்னையில் ஊடுபயிராக கோக்கோ சாகுபடி செய்துள்ள விவசாயிகள் காலத்தே கோக்கோ பழங்களை அறுவடை செய்து கோக்கோ விதைகளை பிரித்து எடுத்து விற்பனை செய்ய வேண்டும். கேட்பரீஸ் இந்திய நிறுவனத்தில் கோக்கோ விதைகளை விற்பனை செய்ய, அந்நிறுவனத்தின் உதவி மேலாளர் ஜோசப் ராஜேஷ் மொபைல் எண் 9965892639 தொடர்பு கொள்ளலாம் அல்லது வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

**இயற்கை விவசாயம், கால்நடை வளர்ப்பு : விழிப்புணர்வு மாட்டு வண்டி பேரணி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,02:23 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் மகளிர் கலைக்கல்லூரி அருகே இருந்து கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இயற்கை விவசாயம் மற்றும் இயற்கை முறையில் கால்நடை வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு மாட்டு வண்டி பேரணியை கலெக்டர் சண்முகம் துவக்கி வைத்தார்.
கால்நடைகளுக்கு இயற்கை முறையில் வளர்க்கப்பட்ட தீவணப்புல் வழங்கி கலெக்டர் சண்முகம் கூறியதாவது: தமிழர்களின் திருநாளான பொங்கல் பண்டிகை மற்றும் தமிழ் புத்தாண்டு சிறப்பிக்கும் வகையில் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகிறது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் கடந்த இரண்டு நாட்களாக பொங்கல் விழா, கால்நடை, மீன் வள வார விழா கொண்டாடப்படுகிறது.

இந்த விழாவின் தொடர்ச்சியாக விவசாயிகளிடையே இயற் கை விவசாயம் மற்றும் இயற்கை முறையில் கால்நடை வளர்ப்பின் அவசியத்தை விளக்கி, விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மாட்டு வண்டி பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. இயற்கை முறைகளை பின்பற்றுவதால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பராமரிக்கப்படுவதுடன், இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்தி பொருட்களை பயன்படுத்துவதன் மூலம் நமக்கு நல்ல உணவு கிடைக்கும். அத்துடன், கால்நடைகளும், வேதிப்பொருட்கள் கலந்த தீவணங்களை உண்ணாமல் இயற்கையில் கிடைக்கும் புல் வகைகளை உண்பதால் நல்ல வளர்ச்சி பெறுவதுடன், கால்நடைகளில் இருந்து நமக்கு கிடைக்கும் பால் போன்ற பொருட்கள் மிகவும் தரமானதாகவும், சத்துள்ளதாகவும் கிடைக்கும்.

எனவே, விவசாயிகளும், கால்நடை வளர்ப்பவர்களும் இயற்கை முறைகளை பின்பற்றி நல்ல லாபமும், வளர்ச்சியும் பெறுவதற்கு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்

தெரிவிக்கும் சிறந்த ஆலோசனைகளை பின்பற்றி செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் ஜெயகுமார், தஞ்சை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பொது மேலாளர் வெங்கடாசலம், கால்நடை நலக்கல்வி மைய இயக்குனர் முரளிமனோகர், மரபுசார் மூலகை பயிற்சி மைய ஆராய்ச்சி மைய தலைவர் புண்ணியமூர்த்தி உட்பட பலர் பங்கேற்றனர். இப்பேரணியில் 20 மாட்டு வண்டிகள் பங்கேற்றது.

**செங்கரும்பு ஜோடி ரூ.50க்கு விற்பனை : வரத்து குறைவால் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,01:57 IST

நாமக்கல்: செங்கரும்பு வரத்து குறைவால் ஒரு ஜோடி கரும்பு, 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நாமக்கல் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரபப்பில் விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்து வருகின்றனர். அந்த கரும்பு சர்க்கரை உற்பத்திக்கு ஆலைகளுக்கும், வெல்லம் தயாரிக்க வெல்ல ஆலைகளுக்கும் அறுவடை செய்து அனுப்பப்படுகிறது. மேலும், பொங்கல் சீஸனுக்காக குறைந்த அளவிலான விவசாயிகள் செங்கரும்பு பயிரிடுகின்றனர். நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை அடிவாரம் காரவள்ளி, ராசிபுரம் அடுத்த மெட்டாலா, ப.வேலூர் பகுதியில் ஒரு சில இடங்களில் என மாவட்டம் முழுவதும் 100க்கும் அதிகமான ஏக்கரில் செங்கரும்பு பயிரிடப்பட்டுள்ளது.

சாகுபடி பரப்பு குறைந்ததற்கு காரணம் மாவட்டத்தில் போதிய அளவு மழை இல்லாதததால், விளைச்சல் குறைந்ததால் கரும்பின் தேவை அதிகரித்தது. அதை தொடர்ந்து வியாபாரிகள், தோட்டங்களில் விளைந்த கரும்பை அதிக விலைக்கு குத்தகைக்கு எடுத்துள்ளனர். அதை அறுவடை செய்து விற்பனைக்காக வெளிமாநிலம், மாவட்டம் என பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கத்துவங்கினர். அதிகப்படியான செங்கரும்பு வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்பட்டதால், உள்ளூரில் விற்பனைக்காக வரத்து குறைந்துள்ளது.விளைச்சல் மற்றும் வரத்து குறைவால், நாமக்கல்லில் ஒரு ஜோடி செங்கரும்பு 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதிக விலை கொடுத்தும் மக்கள் ஆர்வமுடன் வந்து வாங்கி செல்கின்றனர்.

**வேளாண் இடுபொருட்கள் வாகனம் மூலம் விநியோகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,02:59 IST

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் இருந்து வேளாண் துறை சார்பில் கிராம பகுதி விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்களை கிராமங்களில் விநியோகம் செய்யும் வாகனத்தை கலெக்டர் துவக்கி வைத்தார். கிராம பகுதி விவசாயிகளுக்கு தங்கள் இருக்கும் இடங்களில் இடுபொருட்கள் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட வாகனத்தை கலெக்டர் ஆனந்தகுமார் துவக்கி வைத்தார். மேலும் இடு பொருட்கள் அடையாள அட்டையை கொல்லப்பட்டியை சேர்ந்த ரங்கநாதனுக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 98,384 ரூபாய் மதிப்புள்ள ரோட்டோவேட்டர் கருவியை 30 ஆயிரம் ரூபாய் மானியத்திலும், கிருஷ்ணாபுரம் வகுத்தம்பட்டியை சேர்ந்த லட்சுமணனுக்கு ஐசோபாம் எண்ணெய் வித்து திட்டத்தின் கீழ் 2,200 ரூபாய் மதிப்புகள் கைதெளிப்பான் கருவிøயும், 800 ரூபாய் மதிப்பில் ஏ.நடுஅள்ளியை சேர்ந்த சிவராஜ் மற்றும் அக்கமனஅள்ளியை சேர்ந்த பழனி ஆகியோருக்கு கலெக்டர் ஆனந்தகுமார் வழங்கினார்.

வேளாண் உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் அந்தந்த கிராமத்தில் கிடைக்க செய்ய வசதியாக வாகனங்கள் கிராம பகுதியில் இயக்குவதோடு, வேளாண் துறை சார்பில் வழங்கப்படும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ""மாவட்டத்தில் 712 கிராமங்களை சேர்ந்த 16,925 பயனாளிகளுக்கு 85 லட்ச மானிய உதவிகள் வாகனம் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது,'' என வேளாண் இணை இயக்குனர் துரைசாமி தெரிவித்தார்.
* காரிமங்கலம் அடுத்த கொட்டுமாரனஹள்ளியில் தோட்டக்கலை துறை சார்பில் இடு பொருட்கள் வழங்கும் விழா நடந்தது. பஞ்சாயத்து தலைவர் செல்வம் தலைமை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் விவசாயிகளுக்கு இடு பொருட்களை வழங்கினார். தேசிய தோட்டக்கலை இயக்கம் மா பரப்பு விரிவாக்கம், மா அடர் நடவு, மிளகாய் பரப்பு விரிவாக்கம், மா பழைய தோட்டம், புதுப்பித்தல், கோ - கோ பரப்பு விரிவாக்கம் ஆகிய திட்டங்களுக்கு இடு பொருட்கள் வழங்கப்பட்டன.

ஜக்கசமுத்திரம் கிராமத்தில் நடந்த விழாவுக்கு, ஒன்றிய குழு துணை தலைவர் யுவராஜ் தலைமை வகித்தார். மதகேரி, வெலகலஅள்ளி, பிக்கனஅள்ளி, சிங்கேரி ஆகிய கிராமங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு காரிமங்கலத்தில் நடந்த விழாவில், யூனியன் சேர்மன் சந்திரிகா தலைமையில் விவசாயிகளுக்கு இடு பொருட்கள் வழங்கப்பட்டன. தோட்டக்கலை உதவி இயக்குனர் இம்மானுவேல், தோட்டக்கலை அலுவலர் தீபா, வேளாண் உதவி அலுவலர்கள் நாகராஜன், சங்கர், ராஜேந்திரன், குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

* ஊத்தங்கரை யூனியன் நடுப்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கும் விழா நடந்தது. வட்டார வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி தலைமை வகித்து, மானிய விலையில் டி.ஏ.பி., உரம், நுண்ணூட்ட சத்துக்கள், பயறு வகை விதைகள் ஆகியவற்றை வழங்கினார். பஞ்சாயத்து தலைவர் வேங்கி பெருமாள், வேளாண் அலுவலர் பன்னீர்செல்வம், துணை வேளாண் அலுவலர் சீனிவாசன், உதவி வேளாண் அலுவலர்கள் செல்வகுமார், சிவக்குமார், மாதையன் மற்றும் நடுப்பட்டி பஞ்சாயத்துக்கு உட்பட்ட விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பொங்கல் முன்னிட்டு வாழை விலை ஏறுமுகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 15,2011,01:26 IST

லாலாப்பேட்டை: லாலாப்பேட்டை பகுதியில் இருந்து விற்பனையாகும் வாழைத்தார் விலை, பொங்கலை முன்னிட்டு பல மடங்கு உயர்ந்தது. லாலாப்பேட்டை சுற்றியுள்ள பிள்ளபாளையம், மகாதானபுரம், புனவாசிப்பட்டி, வல்லம், கருப்பத்தூர், மகளிப்பட்டி, கள்ளப்பள்ளி பகுதியில் 5,000 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. ரஸ்தாளி, பூவன், கற்பூரவள்ளி இனங்களில் வாழை அதிகமாக வளர்க்கப்படுகிறது. திருச்சி, கோவை, திருப்பூர், கரூர் பகுதியில் விற்பனை செய்யப்படுவதுடன், கேரளாவுக்கும் ஏற்றுமதியாகிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கடந்த இரண்டு நாட்களில் வாழைத்தார் விலை கடுமையாக ஏற்றம் கண்டுள்ளது. வாழைத்தார் ஒன்றின் விலை 150 ரூபாய் வரை மொத்தமாக கொள்முதல் செய்யப்படுகிறது. சில்லறை மார்க்கெட்டில், "சீப்' ஒன்றுக்கு குறைந்தபட்சம் 25 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதனால், படையலுக்கு வாழைப்பழம் வாங்க செல்வோர் அதிர்ச்சியுடன் பழம் வாங்க வேண்டியுள்ளது.

**முட்டை உற்பத்தியில் தமிழகம் 2வது இடம் : சென்னை கால்நடை நலக்கல்வி மைய இயக்குனர் பெருமிதம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,02:22 IST

திருச்சி: ""இந்திய அளவில், முட்டை உற்பத்தியில், தமிழகம் இரண்டாமிடத்தில் இருக்கிறது," என, சென்னை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை, கால்நடை நலக்கல்வி மைய இயக்குனர் முரளி மனோகர் பேசினார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை சார்பில், பொங்கல் விழா, கால்நடை மற்றும் மீன்வள வாரவிழா நடந்தது. சென்னை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை, கால்நடை நலக்கல்வி மைய இயக்குனர் முரளி மனோகர் பேசியதாவது: நாட்டுக்கோழிக்கு இயல்பாகவே நோய் எதிர்ப்புச் சக்தி அதிகம். நாட்டுக்கோழிகளின் இறைச்சி

மற்றும் முட்டையின் தேவை அதிகமாக இருக்கிறது. ஒரு கிலோ இறைச்சி 140 ரூபாய்க்கும், முட்டை 5 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கொல்லைப்புறங்களில் நாட்டுக்கோழி வளர்ப்புக்கான பயிற்சியை பெற பெண்கள் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். தொழி ல்நுட்பத்துடன் கோழி வளர்க்கு ம் பயிற்சி பெறும் பெண்கள் ந ல்ல வருமானம் ஈட்டுகின்றனர்.
இந்தியாவில் 13 கோடி கோழி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. முட்டை உற்பத்தியில், நாமக்கல் பகுதியை சேர்ந்த 1,200 கோழிப்பண்ணைகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

நாள் ஒன்றுக்கு நான்கு கோடி கோழிகள் மூலம், இரண்டரை கோடி முட்டை பெறப்படுகின்றன. சத்துணவில் வாரத்துக்கு ஐந்து முட்டை வழங்க, தமிழக அரசு 30 லட்சம் முட்டைகளை கொள்முதல் செய்கிறது. வெளிநாடுகளுக்கு 35 லட்சம் முட்டை ஏற்றுமதி செய்யப்படுகிறது. 18 லட்சம் முட்டை பவுடராகவும், 75 லட்சம் முட்டை விற்பனையும் செய்யப்படுகின்றன. கர்நாடகாவுக்கு 70 லட்சம், கேரளாவுக்கு 78 லட்சம் முட்டை அனுப்பப்படுகிறது. இந்திய அளவில் முட்டை உற்பத்தியில் தமிழகம் இரண்டாமிடத்தில் இருக்கிறது. முதலிடத்தில் ஆந்திரா இருக்கிறது.

இந்தியாவில் மொத்தம் 60 சதவீத முட்டை உற்பத்தியாகிறது. தினமும் நமக்கு அரை முட்டை என்று ஆண்டுக்கு 180 முட்டை தேவைப்படுகிறது. ஆனால், வெறும் 35 முட்டைகள் மட்டுமே கிடைக்கிறது. மாமிசத்தின் மூலம் கிடைக்கும் புரதச்சத்து மிகச்சிறப்பானது என்றாலும், அதை வாங்க வழியில்லாத நிலையில், நமது குழந்தைகளுக்கு தேவையான புரதச்சத்தை கொடுப்பதற்காகவது, வீட்டில் நாட்டுக்கோழி வளர்ப்பு அவசியம். எந்த தொழிலை செய்தாலும், தொழில்நுட்ப அறிவுடன் செய்தால் வெற்றி நிச்சயம், என்றார்.

**வெளி மார்க்கெட்டில் காய்கறி விலை உயர்வு : உழவர் சந்தைக்கு கூடும் "மவுசு'**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,00:14 IST

உடுமலை : வெளி மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை உயர்வால், உழவர் சந்தைக்கு பொதுமக்கள் வருகை அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். வேளாண் விற்பனை துறை கோட்ட வேளாண் அலுவலர் ராஜேந்திரன் கூறியதாவது : உடுமலை உழவர் சந்தையில் நேற்று சமத்துவ பொங்கல் கொண்டாடப்பட்டது. விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர். வெளி மார்க்கெட்டில் காய்கறி விலை உயர்ந்துள்ளதால், உழவர் சந்தைக்கு நுகர்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இங்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக 40 லிட்டர் பால் விற்பனையாகிறது. நேற்று தை பொங்கல் சிறப்பு காய்கறிகளான மொச்சை

மற்றும் பூசணி வரத்து அதிகரித்தது. மானாவாரி மற்றும் இறவை பாசனத்தில் சாகுபடி செய்யப்பட்ட பயிறு வகைகள் அறுவடை துவங்கியுள்ளது. உளுந்து, பாசி பயிறு மற்றும் தட்டை பயிறு கொண்டு வரும் விவசாயிகளுக்கு தனி இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. பொங்கல் நாளான நேற்று உழவர் சந்தைக்கு 21,760 கிலோ காய்கறிகள் விவசாயிகளால் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. முதல் தர தக்காளி கிலோ 26 ரூபாய்க்கும்; சின்னவெங்காயம் 38 முதல் 48 ரூபாய் வரையும் விற்பனையானது. தற்போது, வடகிழக்கு பருவ மழைக்கு அதிகளவு காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளதால், வரும் வாரங்களில் அறுவடை துவங்கி காய்கறி வரத்து அதிகரிக்கும் எனவும், காய்கறிகள் விலை குறைய வாய்ப்புள்ளதாகவும் வேளாண் அலுவலர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

**தோட்டக்கலை பல்கலை அமைக்க இடம் பரிந்துரை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,01:56 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை பல்கலைகழகம் அமைக்க கிருஷ்ணகிரி அடுத்த ஜுனூர் உள்ளிட்ட நான்கு இடங்களை தோட்டக்கலை துறை மாவட்ட நிர்வாகத்துக்கு பரிந்துரை செய்துள்ளது. "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு தோட்டக்கலை பல்கலை கழகம் அமைக்கப்படும்' என சட்ட சபை கூட்டத்தில் கவர்னர் உரையில் அறிவிக்கப்பட்டது. இதையடுத்து தமிழ்நாடு தோட்டக்கலை பல்கலை கழகம் அமைக்க இடம் தேர்வு செய்ய கலெக்டர் அருண்ராய் தோட்டக்கலை துறைக்கு அறிவுரை வழங்கினார்.

இதன்படி 303 ஏக்கர் பரப்பில் கிருஷ்ணகிரி அடுத்த தேசிய நெடுஞ்சாலையோரம் உள்ள ஜுனூர் அரசு தோட்டக்கலை பண்ணை, 128 ஏக்கர் பரப்புள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நாகமங்கலம் பண்ணை, 1,714 ஏக்கர் உள்ள மத்திகிரி கால்நடைப்பண்ணை, தேன்கனிக்கோட்டை அடுத்துள்ள 968 ஏக்கர் உள்ள கோலட்டி பட்டு வளர்ச்சி பண்ணை ஆகிய நான்கு இடங்களை தோட்டக்கலை துறை தேர்வு செய்து கலெக்டருக்கு அனுப்பியுள்ளனர். இந்த நான்கு இடங்களை தமிழக தோட்டக்கலை துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆய்வு செய்த பின் எந்த இடத்தில் தோட்டக்கலை பல்கலைகழகம் அமைக்கப்படும் என்பது முடிவு செய்யப்படும்.

**வரத்து குறைவால் பூக்களின் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,22:53 IST

பொள்ளாச்சி: பொள்ளாச்சி பூ மார்க்கெட்டில், பூ வரத்து குறைந்திருந்ததால் தொடர்ந்து மூன்றாவது நாளாக மல்லிகை கிலோ ஆயிரம் ரூபாய்க்கு விலை போனது.
பனி பொழிவு காரணமாக ஒரு மாதமாக பொள்ளாச்சி மார்க்கெட்டிற்கு பூ வரத்து குறைந்திருந்தது.

இதனால், அனைத்து பூக்களின் விலையும் எகிறியது. மல்லிகை பூ ஒரு மாதமாக கிலோ 800 ரூபாய் வரை விற்பனையானது.இந்நிலையில், பொங்கல் பண்டிகையையொட்டி மார்க்கெட்டில் பூவுக்கு கிராக்கி ஏற்பட்டது. இதனால், கடந்த 14ம் தேதி ஒரு கிலோ மல்லிகை பூ ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது. அதன்பின் பூ விலை சரியும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தொடர்ந்து மூன்றாவது நாளாக நேற்று ஒரு கிலோ மல்லிகை பூ ஆயிரம் ரூபாய்க்கு விலை போனது.

பொள்ளாச்சி பூ மார்க்கெட்டிற்கு திண்டுக்கல், நிலக்கோட்டை, மதுரை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து நேற்று 500 கிலோ மல்லிகை பூவும், மற்ற பூக்கள் இரண்டு டன்னும் வரத்தாக இருந்தது. இதில், கேரளாவுக்கு 150 டன் மல்லிகை உட்பட ஒரு டன் பூ விற்பனைக்காக அனுப்பப்பட்டது.தேவைக்கேற்ப பூ வரத்து இல்லாததால், மல்லிகை பூ மட்டுமின்றி அனைத்து பூக்களின் விலையும் உயர்ந்துள்ளது.நேற்றைய மார்க்கெட் நிலவரம் (கிலோவுக்கு): செவ்வந்தி-200, அரளி - 160, கோழிக்கொண்டை - 80, செண்டுமல்லி - 60, மல்லிகை - 1,000, ஜாதிப்பூ - 600, "காக்கடா' மல்லி - 400 என விலை போனது. முல்லை பூ வரத்து இல்லை."பண்டிகைக்கு பூவுக்கு கிராக்கி இருந்தும் போதிய வரத்து இல்லாததால், விலை உயர்ந்து காணப்பட்டது. தற்போது, பண்டிகை முடிந்துள்ளதால், பூ விலை சரியும் என எதிர்பார்க்கப்படுகிறது. மல்லிகை பூ கிலோவுக்கு 200 ரூபாய் வரை மட்டுமே சரிய வாய்ப்புள்ளது. பனி பொழிவு முடிந்து வரத்து சீராக இன்னும் இரண்டு மாதங்களாகும். அப்போதுதான், விலை சரியும், என, பூ வியாபாரிகள் தெரிவித்தனர்.

## வரத்து குறைவு; சின்ன வெங்காயம் விலை ஏற்றம்

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,23:23 IST

வெள்ளகோவில்: பண்டிகை தினம் என்பதால் நேற்று வாரச்சந்தையில் , காய்கறி விலை ஏறியது. வரத்து குறைவு மற்றும் தேவை அதிகரிப்பு காரணமாக சின்ன வெங்காயம் விலை கடந்த வாரங்களை விட அதிகரித்து காணப்பட்டது.வெள்ளகோவில் புது பஸ் ஸ்டாண்ட் பகுதியில் வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமை வாரச்சந்தை கூடுகிறது. காய்கறி, பழம், தேங்காய் என அனைத்து பொருட்களும் ஒரே இடத்தில் கிடைப்பதால், வெள்ளகோவில் பகுதிகளை சேர்ந்த பலரும் வாரச்சந்தையையே நாடுகின்றனர். பொங்கல் பண்டிகை என்பதால், வெளியூரை சேர்ந்தவர்களில் பலர் சொந்த ஊருக்கு சென்றுள்ளனர். பொங்கல் வைக்க படையல் பொருட்கள், காய்கறிகள் வாங்க வந்தவர்களால் சந்தை பகுதி வழக்கத்தைவிட நேற்று பரபரப்பாக காணப் பட்டது. கரும்பு, மஞ்சள் அதிகளவில் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது.பண்டிகை விரதம் என்பதால், பெரும்பாலானோர் அசைவத்தை தவிர்த்து சைவத்துக்கு தாவியுள்ள நிலையில், சந்தையில் நேற்று காய்கறி விலை அதிகரித்து காணப்பட்டது. சாம்பார், ரசம் என அனைத்து

சைவ உணவு வகைகளுக்கும் முக்கிய தேவையாக உள்ள சின்ன வெங்காயம் விற்பனை சூடுபிடித்தது. வெளியூர்களில் இருந்து வரத்து குறைவு மற்றும் தேவை அதிகரிப்பு காரணமாக, நேற்று கிலோ 80 முதல் 82 ரூபாய் வரை விற்கப்பட்டது; கடந்த வாரம் 80 ரூபாய்க்கு விற் கப்பட்ட பெல்லாரி வெங்காயம், விலை குறைந்து, 60 ரூபாய்க்கு விற்கப்பட்டது.சின்ன வெங்காயம் ரூ.82; பெரிய வெங்காயம் ரூ.60; பச்சை மிளகாய் 50; பாகல் 20; பீர்க்கன் காய் 40; புடலை 20; பூண்டு 170; தேங்காய் ஒன்று 10 முதல் 12 ரூபாய் வரை விற்கப்பட்டது. கரும்பு ஒன்று 30 ரூபாய், மஞ்சள் 5 ரூபாய் என்ற விலையில் விற்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,23:23 IST

காங்கயம்: வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு அடையாள அட்டை மற்றும் இடுபொருட்கள் வழங்கும் விழா, காங்கயத்தில் நடந்தது. நிகழ்ச்சிக்கு காடையூர் பி.ஏ.பி., பாசன நீர் உபயோகிப்போர் சங்க தலைவர் விவேகானந்தன் தலைமை வகித்தார்.விவசாயிகளுக்கு அடை யாள அட்டைகள்; நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் சூரியகாந்தி, பயறுவகை பயிர் செயல்விளக்க திடல்களுக்கு இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டது. காங்கயம் வேளாண்மை உதவி இயக்குநர் மாணிக் கம், வேளாண்மை அலுவலர் சுசீலா மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**முட்டை உற்பத்தியில் தமிழகம் 2வது இடம் : சென்னை கால்நடை நலக்கல்வி மைய இயக்குனர் பெருமிதம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,02:22 IST

திருச்சி: ""இந்திய அளவில், முட்டை உற்பத்தியில், தமிழகம் இரண்டாமிடத்தில் இருக்கிறது,'' என, சென்னை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை, கால்நடை நலக்கல்வி மைய இயக்குனர் முரளி மனோகர் பேசினார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை சார்பில், பொங்கல் விழா, கால்நடை மற்றும் மீன்வள வாரவிழா நடந்தது. சென்னை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை, கால்நடை நலக்கல்வி மைய இயக்குனர் முரளி மனோகர் பேசியதாவது: நாட்டுக்கோழிக்கு இயல்பாகவே நோய் எதிர்ப்புச் சக்தி அதிகம். நாட்டுக்கோழிகளின் இறைச்சி மற்றும் முட்டையின் தேவை அதிகமாக இருக்கிறது. ஒரு கிலோ இறைச்சி 140 ரூபாய்க்கும், முட்டை 5 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கொல்லைப்புறங்களில் நாட்டுக்கோழி வளர்ப்புக்கான பயிற்சியை பெற பெண்கள் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். தொழி ல்நுட்பத்துடன் கோழி வளர்க்கு ம் பயிற்சி பெறும் பெண்கள் ந ல்ல வருமானம் ஈட்டுகின்றனர்.

இந்தியாவில் 13 கோடி கோழி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. முட்டை உற்பத்தியில், நாமக்கல் பகுதியை சேர்ந்த 1,200 கோழிப்பண்ணைகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

நாள் ஒன்றுக்கு நான்கு கோடி கோழிகள் மூலம், இரண்டரை கோடி முட்டை பெறப்படுகின்றன. சத்துணவில் வாரத்துக்கு ஐந்து முட்டை வழங்க, தமிழக அரசு 30 லட்சம் முட்டைகளை கொள்முதல் செய்கிறது. வெளிநாடுகளுக்கு 35 லட்சம் முட்டை ஏற்றுமதி செய்யப்படுகிறது. 18 லட்சம் முட்டை பவுடராகவும், 75 லட்சம் முட்டை விற்பனையும் செய்யப்படுகின்றன. கர்நாடகாவுக்கு 70 லட்சம், கேரளாவுக்கு 78 லட்சம் முட்டை அனுப்பப்படுகிறது. இந்திய அளவில் முட்டை உற்பத்தியில் தமிழகம் இரண்டாமிடத்தில் இருக்கிறது. முதலிடத்தில் ஆந்திரா இருக்கிறது.

இந்தியாவில் மொத்தம் 60 சதவீத முட்டை உற்பத்தியாகிறது. தினமும் நமக்கு அரை முட்டை என்று ஆண்டுக்கு 180 முட்டை தேவைப்படுகிறது. ஆனால், வெறும் 35 முட்டைகள் மட்டுமே கிடைக்கிறது. மாமிசத்தின் மூலம் கிடைக்கும் புரதச்சத்து மிகச்சிறப்பானது என்றாலும், அதை வாங்க வழியில்லாத நிலையில், நமது குழந்தைகளுக்கு தேவையான புரதச்சத்தை கொடுப்பதற்காகவது, வீட்டில் நாட்டுக்கோழி வளர்ப்பு அவசியம். எந்த தொழிலை செய்தாலும், தொழில்நுட்ப அறிவுடன் செய்தால் வெற்றி நிச்சயம், என்றார்.

**மல்லிகை சாகுபடி குறைவு மற்ற பூக்களுக்கு கடும் கிராக்கி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,02:55 IST

லாலாப்பேட்டை: பொங்கல் பண்டிகை காலத்தில் லாலாப்பேட்டைக்கு புகழ் அளிக்கும் மல்லிகை பூ, சீசன் துவங்காததால் மற்ற பூக்களின் விற்பனை அதிகரித்தது. லாலாப்பேட்டை பகுதியில் மல்லிகை செடி மாசி முதல் ஐப்பசி மாதம் வரை வளர்க்கப்படுகிறது. கடவூர், கிருஷ்ணராயபுரம், லாலாப்பேட்டை, தானியம்பட்டி, குளித்தலை பகுதியான நங்கவரம், வளையப்பட்டி, சூரியனூர் உள்ளிட்ட இடங்களில் தோட்டங்களில் மல்லிகை பயிரிடப்படுகிறது. பெரும்பாலும் நாட்டு மல்லிகை ரகமாக குண்டு மல்லிகை இங்கு வளர்க்கப்பட்டு, திருச்சி, மணப்பாறை, திண்டுக்கல், சேலம், மதுரை பூ மார்க்கெட்டுக்கு அனுப்பப்படுகிறது.

சிறு மற்றும் குறு விவசாயிகள், மல்லிகை சாகுபடி மூலம் கணிசமான லாபம் பார்த்தனர். தற்போது சீசன் மாறிவிட்டதால், பூ விளைச்சலும் குறைந்துவிட்டது. மார்கழியில் இருந்து மூன்று மாதத்துக்கு முற்றிலும் இவை பூக்காத காரணத்தினால், வெளி மாநில பூ வரவழைக்கப்படுகிறது. கிலோ 1,000 ரூபாய் வரை மொத்தமாக மார்க்கெட்டில் விலை நிர்ணயம் செய்யப்படுவதால், பூ வியாபாரிகள் மல்லிகையை வாங்கி சில்லரை விற்பனை செய்ய தயங்குகின்றனர். பெங்களூரு

பகுதியில் விளையும் "காக்ட்ரா' என்னும் பெங்களூர் மல்லிகையே தற்போது ஓசூர், கிருஷ்ணகிரி பகுதிகளிலும் விளைகிறது. மல்லிகை விலையை சமாளிக்க இவை வரவழைக்கப்படுகிறது. மல்லிகை பூ வரத்து இல்லாமல், வாசமில்லாத பெங்களூர் மல்லிகைக்கும் தற்போது 300 ரூபாய் வரை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொங்கலுக்கு வாசமில்லாத மலர்தான், மல்லிகையின் இடத்தை நிரப்புகிறது.

### கரூரில் பால் உற்பத்தி அதிகரிப்பு கருத்தரங்கு

பதிவு செய்த நாள் : ஜனவரி 17,2011,02:54 IST

கரூர்: கரூர் கால்நடை பல்கலைழக்கழகம் மற்றும் ஆராய்ச்சி மையம், திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் சார்பில் பால் உற்பத்தி அதிகரிப்பு கருத்தரங்கு ஆத்தூரில் நடந்தது. கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் செந்தில்வேல் தலைமை வகித்தார். ஆத்தூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தனி அலுவலர் ராஜசேகர் முன்னிலை வகித்தார். செயலாளர் கருணாநிதி வரவேற்றார்.
டாக்டர் வேலுசாமி, பால் உற்பத்தி பெருக்குதல் குறித்து விளக்கினார். உதவி பேராசிரியர் சந்திரசேகரன், டாக்டர் சக்திவேல், உதவி இயக்குனர் பழனிவேலு மற்றும் பலர் பங்கேற்றனர். கலப்பின கன்றுகள் பேரணி நடத்தப்பட்டு, ஆத்தூர் கருணாநிதியின் ஜெர்சி இன கன்றுக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. முருகேசன் கன்றுக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. கரூர்ஆவின் விரிவாக்க அலுவலர் அருணாசலம் நன்றி கூறினார்.

### ஒரு கிலோ மல்லிகைப் பூ ரூ.1,000

பதிவு செய்த நாள் : ஜனவரி 15,2011,00:15 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி பூ மார்க்கெட்டில் மல்லிகை பூ ஒரு கிலோ ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது.மதுரை, நிலக்கோட்டை, திண்டுக்கல் பகுதிகளிலிருந்து பொள்ளாச்சி பூ மார்க்கெட்டிற்கு மல்லிகை, ஜாதி மல்லி, அரளி, கோழிக்கொண்டை, சம்பங்கி, செவ்வந்தி உள்ளிட்ட பூக்கள் விற்பனைக்கு வருவது வழக்கம். பொங்கல் திருவிழாவிற்கு பூக்கள் தேவை

அதிகரித்ததால் மார்க்கெட்டில் பூவின் விலை எகிறியது. நேற்றைய பூ மார்க்கெட் நிலவரம்:ஒரு கிலோவுக்கு செவ்வந்தி- 140, அரளி - 160, கோழிக்கொண்டை - 60, செண்டுமல்லி - 40, மல்லிகை - 1,000 என விலை போனது. முல்லை மற்றும் ஜாதிமல்லிகை பூக்கள் வரத்து இல்லை.

**மழையால் பாதித்த நெற்பயிர்கள் : விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,01:46 IST

பரமக்குடி : நயினார்கோவில் ஒன்றியத்திற்குட்பட்ட பெரும்பாலான கிராமங்களில் நெற்பயிர்கள் மழையால் சேதமடைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர் நயினார்கோவில் ஒன்றியம் பெரியனேந்தலில் அறுவடை பணிகள் நடைபெறுகின்றன. வேலை ஆட்கள் அதிக கூலி கேட்பதாலும், ஆட்கள் பற்றாக்குறையால் மிஷின்கள் கொண்டு அறுவடை நடக்கிறது. ஏக்கருக்கு ஒரு மணிநேரத்திற்கு 1400 முதல் 1800வரை ரூபாய் செலவாகிறது. கடந்த மாதங்களில் பெய்த கனமழையின் காரணமாக வயல்வெளிகள் இன்றும் ஈரப்பதத்துடன் உள்ளதால், மிஷின்கள் புதைகின்றன. இதுநாளும் வாடகை அதிகரிக்கிறது. ஏற்கனவே நெல்மணிகள் பதர்களாக சுருங்கி விட்ட நிலையில் .கடந்த ஆண்டைவிட குறைந்த அளவே லாபம் கிடைக்கும் என்பதால் ஒரு சிலர் தங்களே அறுவடையில் ஈடுபட்டுள்ளனர். சிட்டு, செல்வி கூறியதாவது: ஈரப்பதத்தால் மிஷின் கொண்டு அறுவடை செய்ய அதிகம் செலவாகும் என்பதாலும், கூலி ஆட்கள் கிடைத்தாலும் செலவுகளை தாக்குபிடிக்க முடியாது என்பதாலும் நாங்களே அறுவடையில் ஈடுபட்டுள்ளோம். நிலங்களில் பூச்சி மற்றும் ஈரத்தின் காரணமாக மூச்சு விட முடியாத படி நாற்றம் வீசுகிறது. செய்த செலவுகளை ஈடுகட்ட நாங்களே அறுவடையில் ஈடுபட்டுள்ளோம். நிவாரணம் வழங்கினால் மட்டுமே வங்கிகளில் நகைகளை அடகு வைத்துள்ளதை மீட்க முடியும், என்றனர்.

**விதை பண்ணை பதிய அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 15,2011,00:15 IST

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்டத்தில் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் அமைத்த விதை பண்ணைகளை உரிய காலத்தில் பதிவு செய்யமாறும், உரிய காலங்களில் கலவன்களை நீக்குமாறும் விதை உற்பத்தியாளர்களை ராமநாதபுரம் விதை சான்று உதவி இயக்குனர் ராஜகோபால் கேட்டுகொண்டுள்ளார்

இயற்கை விவசாயம், கால்நடை வளர்ப்பு : விழிப்புணர்வு மாட்டு வண்டி பேரணி

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,02:23 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் மகளிர் கலைக்கல்லூரி அருகே இருந்து கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இயற்கை விவசாயம் மற்றும் இயற்கை முறையில் கால்நடை வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு மாட்டு வண்டி பேரணியை கலெக்டர் சண்முகம் துவக்கி வைத்தார்.
கால்நடைகளுக்கு இயற்கை முறையில் வளர்க்கப்பட்ட தீவணப்புல் வழங்கி கலெக்டர் சண்முகம் கூறியதாவது: தமிழர்களின் திருநாளான பொங்கல் பண்டிகை மற்றும் தமிழ் புத்தாண்டு சிறப்பிக்கும் வகையில் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகிறது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் கடந்த இரண்டு நாட்களாக பொங்கல் விழா, கால்நடை, மீன் வள வார விழா கொண்டாடப்படுகிறது.

இந்த விழாவின் தொடர்ச்சியாக விவசாயிகளிடையே இயற் கை விவசாயம் மற்றும் இயற்கை முறையில் கால்நடை வளர்ப்பின் அவசியத்தை விளக்கி, விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மாட்டு வண்டி பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. இயற்கை முறைகளை பின்பற்றுவதால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பராமரிக்கப்படுவதுடன், இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்தி பொருட்களை பயன்படுத்துவதன் மூலம் நமக்கு நல்ல உணவு கிடைக்கும். அத்துடன், கால்நடைகளும், வேதிப்பொருட்கள் கலந்த தீவணங்களை உண்ணாமல் இயற்கையில் கிடைக்கும் புல் வகைகளை உண்பதால் நல்ல வளர்ச்சி பெறுவதுடன், கால்நடைகளில் இருந்து நமக்கு கிடைக்கும் பால் போன்ற பொருட்கள் மிகவும் தரமானதாகவும், சத்துள்ளதாகவும் கிடைக்கும்.

எனவே, விவசாயிகளும், கால்நடை வளர்ப்பவர்களும் இயற்கை முறைகளை பின்பற்றி நல்ல லாபமும், வளர்ச்சியும் பெறுவதற்கு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் தெரிவிக்கும் சிறந்த ஆலோசனைகளை பின்பற்றி செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் ஜெயகுமார், தஞ்சை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பொது மேலாளர் வெங்கடாசலம், கால்நடை நலக்கல்வி மைய இயக்குனர் முரளிமனோகர், மரபுசார் மூலகை பயிற்சி மைய ஆராய்ச்சி மைய தலைவர் புண்ணியமூர்த்தி உட்பட பலர் பங்கேற்றனர். இப்பேரணியில் 20 மாட்டு வண்டிகள் பங்கேற்றது.

**கிலோ ரூ.160க்கு கோக்கோ விதை கொள்முதல்: அதிகாரி அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,02:24 IST

தஞ்சாவூர்: "தஞ்சாவூர் மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் தேசிய தோட்டக்கலை இயக்குகத்தின் கீழ் தென்னையில் ஊடுபயிராக சாகுபடி செய்ய ஏக்கருக்கு 200 கோக்கோ கன்றுகள் மற்றும் அதற்கு தேவையான உயிர் உரங்கள், இயற்கை உரங்கள், நீரில் கரையும் உரங்கள் வழங்கப்பட்டுள்ளது' என தோட்டக்கலை துணை இயக்குனர் செல்வராஜ் தெரிவித்தார்.
அவர் வெளியிட்ட அறிக்கை: கடந்த 2007-08ம் ஆண்டில் நடவு செய்யப்பட்ட கோக்கோ கன்றுகள் தற்போது மகசூல் தர துவங்கியுள்ளன. சாக்லேட் தயாரிப்பில் முன்னணி நிறுவனமாக விளங்கும் கேட்பரீஸ் இந்திய நிறுவனம் தற்போது கோக்கோ விதைகளை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய துவங்கியுள்ளது. ஒரு கிலோ கோக்கோ விதைகள் தற்போது ரூபாய் 160க்கு கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை தஞ்சை மாவட்டத்தில் 1,200 கிலோ கோக்கோ விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

தென்னையில் ஊடுபயிராக கோக்கோ சாகுபடி செய்துள்ள விவசாயிகள் காலத்தே கோக்கோ பழங்களை அறுவடை செய்து கோக்கோ விதைகளை பிரித்து எடுத்து விற்பனை செய்ய வேண்டும். கேட்பரீஸ் இந்திய நிறுவனத்தில் கோக்கோ விதைகளை விற்பனை செய்ய, அந்நிறுவனத்தின் உதவி மேலாளர் ஜோசப் ராஜேஷ் மொபைல் எண் 9965892639 தொடர்பு கொள்ளலாம் அல்லது வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

**கொற்கை கால்நடை பண்ணையில் கால்நடைத்துறை கமிஷனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,02:26 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகே உள்ள கொற்கை கால்நடை பண்ணையில் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் துறை கமிஷனர் மாலிக் பெரோஸ்கான் ஆய்வு செய்தார். திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே கொற்கையில் 495.68 ஏக்கரில் செயல்படும் கால்நடை பண்ணையை கமிஷனர் மாலிக் பெரோஸ்கான் ஆய்வு செய்தார். அங்கு வளர்க்கப்படும் உம்பளச்சேரி பசுமாடு இனத்தை பார்வையிட்டு, மாடு பராமரிப்பு, உணவு வழங்குதல், கால்நடைகள் பனி, மழைகாலங்களில் எவ்வாறு பராமரிப்பது என்பது குறித்து கேட்டறிந்தார். பண்ணையின் பரப்பளவு, தீவணப்புல் வளர்ப்பு குறித்து விளக்கப்பட்டது. பராமரிப்பு குறித்து அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

மண்டல இணை இயக்குனர் பழனியப்பன், துணை இயக்குனர் சிவானந்தன், மன்னார்குடி உதவி இயக்குனர் அழகிரிசாமி, கொற்கை கால்நடைப்பண்ணை டாக்டர் ராமலிங்கம் ஆகியோர் உடனிருந்தனர். இப்பண்ணையில் 249 கால்நடைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்குள்ள மாடுகளுக்கு 233.86 ஏக்கரில் மேய்ச்சல் நிலம் தயாரிக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. கடந்த 2009ம் ஆண்டு முதல் 125 ஏக்கரில் மகாராஷ்டிரா தீவணப்புல் 34.50 லட்சம் ரூபாய் செலவில் மத்திய அரசின் நிதியுதவியுடன் வளர்க்கும் பணி நடக்கிறது. விவசாயிகளுக்கு இதுவரை 73 ஆயிரத்து 665 கிலோ புல் விற்பனை செய்யப்பட்டு 73 ஆயிரத்து 665 ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. பண்ணையில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு ஆயிரத்து 642.87 டன் தீவணப்புல் உணவாக பயன்படுத்தப்பட்டுள்ளது. 498 விவசாயிகள் தீவணப்புல் பெற்று பயனடைந்துள்ளனர். 23 விவசாயிகளுக்கு தீவணப்புல் வளர்க்க 94 ஆயிரம் புல் கரணைகள் வழங்கப்பட்டுள்ளது. புல் கரணை மூலம் 13 ஆயிரத்து 160 ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

**வெள்ளம் பாதித்தோருக்கு நிவாரண உதவி வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,02:26 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி டவுன் லயன்ஸ் கிளப் சார்பில் மங்கை மகாலில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆளுனர் புவனேஸ்வரி தலைமையில் நடந்தது. லயன்ஸ் தலைவர் ராஜேஷ்குமார் வரவேற்றார். ஆயிரம் பயனாளிகளுக்கு வெள்ள நிவாரணப்பொருட்களை லயன்ஸ் ஆளுனர் புவனேஸ்வரி வழங்கி பேசினார். லயன்ஸ் மாவட்டத்தில் 15 லயன்ஸ் சங்கங்கள் பங்கேற்று நிவாரணப்பொருட்களை பெற்றுச் சென்றனர். முன்னாள் மாவட்ட ஆளுனர் மனோகரன், ஜான்சன், மண்டலத்தலைவர் நந்தகோபால், வட்டாரத்தலைவர் சந்திரசேகரன், பொருளாளர் முத்துகுமாரன் உட்பட பலர் பேசினர். ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீராம் தொகுத்து வழங்கினார். செயலாளர் ஜோசப்ராஜ் நன்றி கூறினார்.

**திராட்சை, மா, வாழை, மலர்கள்விவசாயிகளுக்கு அடிக்குது "ஜாக்பாட்'**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,23:01 IST

கம்பம்:வாழை, மா, திராட்சை, கொட்டை முந்திரி, மலர்கள் ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உரம் மற்றும் ரொக்கத்தை தோட்டக்கலைத்துறை கொட்டி கொடுத்து வருகிறது.

தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் கம்பம் பள்ளத்தாக்கில் திசு வாழை சாகுபடிசெய்துள்ள விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு 31 ஆயிரம் ரூபாய் மண்புழு உரம், பொட்டாசியம் நைட்ரேட், அடர் நடவு வாழைக்கு 21 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள உரங்கள், கட்டை வாழைக்கு 17 ஆயிரத்து 875 ரூபாய் மதிப்புள்ள உரங்கள் வழங்கப் படுகிறது.மாங்காயை பொறுத்தவரை ஒரு ஆண்டு ஆன பயிர்களுக்கு பத்தாயிரம் ரூபாய், பழைய தோட்டங்களை புதுப்பித்தலுக்கு 15 ஆயிரம் ரூபாய், அடர் நடவிற்கு 27 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள உரங்கள் வழங்கப்பட்டு வருகிறது.கிழங்கு மலரான சம்பங்கிக்கு 45 ஆயிரம் ரூபாய், உதிரி மலர்களுக்கு 12 ஆயிரம் ரூபாய், திராட்சைக்கு 16 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள உரங்கள் வழங்கப்படுகிறது.

கம்பம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் செந்தில்குமார் கூறியதாவது:தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் பொட்டாசியம் நைட்ரேட், மண்புழு உரம், அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா உள்ளிட்ட உரங்கள் மற்றும் ரொக்கம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் தங்கள் சாகுபடி செய்துள்ள நிலத்தின் சிட்டா அடங்கல், ரேஷன் கார்டு, பாஸ்போர்ட் சைஸ் போட்டோ கொடுக்க வேண்டும். வாழை என்றால் வாழைக்கு முன்பு நின்று எடுத்த போட்டோ காண்பிக்க வேண்டும். விருப்பமுள்ள விவசாயிகள் கம்பம் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்றார்.

**மழையால் பாதித்த நெற்பயிர்கள் : விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,01:46 IST

பரமக்குடி : நயினார்கோவில் ஒன்றியத்திற்குட்பட்ட பெரும்பாலான கிராமங்களில் நெற்பயிர்கள் மழையால் சேதமடைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர் நயினார்கோவில் ஒன்றியம் பெரியனேந்தலில் அறுவடை பணிகள் நடைபெறுகின்றன. வேலை ஆட்கள் அதிக கூலி கேட்பதாலும், ஆட்கள் பற்றாக்குறையால் மிஷின்கள் கொண்டு அறுவடை நடக்கிறது. ஏக்கருக்கு ஒரு மணிநேரத்திற்கு 1400 முதல் 1800வரை ரூபாய் செலவாகிறது. கடந்த மாதங்களில் பெய்த கனமழையின் காரணமாக வயல்வெளிகள் இன்றும் ஈரப்பதத்துடன் உள்ளதால், மிஷின்கள் புதைகின்றன. இதுநாளும் வாடகை அதிகரிக்கிறது. ஏற்கனவே நெல்மணிகள் பதர்களாக சுருங்கி விட்ட நிலையில் .கடந்த ஆண்டைவிட குறைந்த அளவே லாபம் கிடைக்கும் என்பதால் ஒரு சிலர் தங்களே அறுவடையில் ஈடுபட்டுள்ளனர். சிட்டு, செல்வி கூறியதாவது: ஈரப்பதத்தால் மிஷின் கொண்டு அறுவடை செய்ய அதிகம் செலவாகும் என்பதாலும், கூலி ஆட்கள் கிடைத்தாலும் செலவுகளை தாக்குபிடிக்க முடியாது என்பதாலும் நாங்களே அறுவடையில் ஈடுபட்டுள்ளோம். நிலங்களில் பூச்சி மற்றும் ஈரத்தின் காரணமாக மூச்சு விட முடியாத படி நாற்றம் வீசுகிறது. செய்த

செலவுகளை ஈடுகட்ட நாங்களே அறுவடையில் ஈடுபட்டுள்ளோம். நிவாரணம் வழங்கினால் மட்டுமே வங்கிகளில் நகைகளை அடகு வைத்துள்ளதை மீட்க முடியும், என்றனர்.

**விவசாயிகள் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 16,2011,01:48 IST

பரமக்குடி : வைகைபாசன விவசாயிகள் சங்க கூட்டம் தலைவர் தவசீலன் தலைமையில் நடைபெற்றது. சங்கசெயலாளர் மதுரை வீரன் முன்னிலை வகித்தார். அரசு விதிகளை மீறி வைகை ஆற்றில் 3அடிக்குப் பதிலாக 20அடி மணல் அள்ளுவதையும், இயந்திரம் மூலம் அள்ளுவதை தடை செய்யக் கோரியும், தரைப்பாலம் கழிவுகளை அப்புறப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.